**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.132/2019</u>**

பெயர்–திரு.சதீஸ் நாள்.10.03.2026

பி.வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.2 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. பிரதிவாதி அழைத்துள்ளதால் வந்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி பணம் தரவில்லை என வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் , பிரதிவாதி எனக்கு 20 வருடங்களாக தெரியும், பிரதிவாதி வட்டி தொழில் செய்கிறாரா என்றால் எனக்கு தெரியாது. நான் வ்ட்டி தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. விவசாயம் செய்கிறேன். நான் சக்திவேலுடன் வேலை செய்திருக்கிறேனா என்றால் இல்லை. சக்திவேல் வட்டி தொழில் செய்வதற்கு உதவியாக நான் பணம் வசூல் செய்துவருகிறேனா என்றால் இல்லை. பிரதிவாதிக்காக நான் இரண்டு காசோலை வழக்குகளில் ஆஜராகி வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3ல் காவிலிபாளையத்தில் உள்ள 1/2 ஏக்கர் பூமியை கிரையம் வாங்குவதற்காக நான் சாட்சி கையொப்பம் செய்தேன். இடம் கிரையம் வாங்கியதற்காக சாட்சி கையொப்பம் செய்தேன். கிரைய தொகையை காசோலை மூலமாக கொடுத்த விவரம் எனக்கு தெரியும். காசோலை கொடுத்ததை நான் நேரில் பார்த்தேன். பிரமாண பத்திரத்தில் காசோலை வேண்டாம் என மறுத்துவிட்டு பணமாக தருமாறு கேட்டதாக குறிபிட்டுள்ளேன் என்றால் சரிதான். பணமும் கொடுத்தார் காசோலையும் கொடுத்தார். வா.சா.ஆ.3ல் கிரைய தொகையாக காசோலை கொடுத்தாகதான் குறிபிடபட்டுள்ளது என்றால் சரிதான், மேற்படி காசோலை கொடுத்த விவரம் மற்றொரு சாட்சியான கண்ணனுக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி முருகேஷ் மற்றும் தண்டபாணியை கிரையத்தின் போது எனக்கு

தெரியும். அதற்கு முன்பு தெரியாது. பிரதிவாதி காசோலை கொடுக்காதது தெரிந்து கொண்டே பிரதிவாதி எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.03.10 21:40:17 +0530

District Munsif